நாள்: **08.03.2024**

**O.S. No. 44/2023**

**வா.சா.1**

**பெயர்: சிவராமகிருஷ்ணன், த/பெ. சுப்ரமணியன்**

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

எனக்கு சொந்த ஊர் தேவர்கண்டநல்லூர். எனது வீட்டின் விலாசம் 1/128 உச்சிமேட்டுத்தெரு. நான் விவசாய தொழில் செய்து வருகிறேன். தேவர்கண்டநல்லூர் ஊராட்சி மன்ற தலைவர் பதவிக்கு போட்டியிட்டேனா என்றால் இல்லை. தாவா சொத்தின் சர்வே நம்பர் 85/1 ஆகும். அதன் மொத்த விஸ்தீரணம் 37.5 ஏர்ஸ். மேற்படி மொத்த விஸ்தீரணத்தில் திரௌபதிஅம்மன் கோயில், காளியம்மன் கோயில், ராமர் மடம் உள்ளது. மேற்படி தாவா சொத்தில் நீர்நிலை தேக்க தொட்டி இருந்தது என்றால் இடிந்துவிட்டது. தற்பொழுது நூலகம் உள்ளது. தாவா சொத்து கோயிலுக்கு சொந்தமானது என்பதை நிரூபிக்க கூடிய ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. தாவா சொத்தில் உள்ள திரௌபதிஅம்மன் கோயில் யாருடைய கட்டுப்பாட்டில் உள்ளது என்றால் தனிநபர் நிர்வாகத்தில் உள்ளது. அதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. தாவா சொத்தை திருக்கோயில் நிர்வாகம் என்னிடம் ஒப்படைத்ததற்கு ஏதேனும் குத்தகை ஆவணம் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். குத்தகையை எனது பெயருக்கு ஏற்பட்டதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் திருக்கோயில் நிர்வாகம் எனது பெயருக்கு குத்தகை வழங்கிய கடிதம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனது வழக்குரையில் கதவிலக்கம் 1/100 B2 என்று குறிப்பிட்டுள்ளேன். மேற்படி கதவிலக்கத்தில் வசித்து வருகிறேனா என்றால் இல்லை.

தற்போது 1/128 ல் வசித்து வருகிறேன். வழக்குரையில் கதவிலக்கம் 105 என்று குறிப்பிட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்படுகிறது.**

ஒம் /- S. விஜய் ஆனந்த்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவாரூர்.